மயிலாடுதுறை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

மூ.மு.எண். 1664/அ1/ 2024, நாள். 21.10.2024

பொருள்: பள்ளிக்கல்வி தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை நியமனம் - மயிலாடுதுறை மாவட்டம் – வாணகிரிகுப்ம் அரசு உயர்நிலைப்பள்ளி ஆய்வக உதவியாளர் திரு.பி.செல்வராஜ் என்பவர் 05.02.2014இல் இறப்பு வாரிசுதாரரின் மகன் திரு.செ.ஆனந்தராஜ் என்பாருக்கு கருணை அடிப்படையில் 14.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - சார்பு.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்று வேலைவாய்ப்பு (க்யூ 1))த்துறை நாள் – 02.03.2016
2. அரசாணை நிலை எண்.48 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ 1)த்துறை நாள் – 26.02.2021
3. அரசாணை (நிலை) எண்.151 பள்ளிக் கல்வி (பக1(1)த்துறை நாள் – 09.09.2022
4. மயிலாடுதுறை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் ந.க.எண்.0022/அ1/2021, நாள் – 13.10.2022, 05.10.2023
5. அரசுக் கடித எண் (efile) எண். 4419/தொ.க. 1(1)/2024-1 நாள் – 17.05.2024
6. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.26062/ஜே/இ2/2023 நாள் – 22.05.2024
7. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.59187/ஜே/இ2/2023 நாள் – 04.06.2024

**********

மயிலாடுதுறை மாவட்டம், வாணகிரிகுப்பம் அரசு உயர்நிலைப்பள்ளியில் ஆய்வக உதவியாளராக பணிபுரிந்த திரு.பி,செல்வராஜ் என்பார் பணியில் இருக்கும் போது 05.02.2014 அன்று காலமானார். அவரது மகன் திரு.செ.ஆனந்தராஜ் என்பார் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க கோரி 03.02.2016 அன்று விண்ணப்பித்துள்ளார். திரு.செ.ஆனந்தராஜ் என்பவர் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வினை மார்ச் 2010 இல் தேர்ச்சி பெற்றுள்ளார். இவரின் பிறந்த தேதி 08.12.1992 மேலே (1)இல் படிக்கப்பட்ட அரசாணைப்படி தனியர் கருணை அடிப்படையிலான அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

இறந்த அரசு ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது. அவருடைய குடும்பத்தில் எவரும் அரசு பணியில் இல்லை என்பதை கருத்தில் கொண்டு திரு.செ.ஆனந்தராஜ் என்பவருக்கு மயிலாடுதுறை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.0019/அ1/2021, நாள்.13.10.2022 இல் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு அவர் 14.10.2022 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாக மேல் தெரிவிக்கப்பட்ட நிலையில் திரு.செ.ஆனந்தராஜ் என்பவரின் பணியினை தனியர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியில் இணைந்த 14.10.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநருக்கு கருத்துரு பணிந்தனுப்பப்பட்டது.

தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் கடித ந.க.எண்.59187/ஜே/இ2/2023, நாள்.04.06.2024 இல் அனைத்து அசல் சான்றிதழ் மற்றும் கருத்துருவினை இணைத்து அரசுக் கடித efile எண்.4419/தொ.க.1(1))2024-1 நாள்.17.05.2024 இல் தெரிவிக்கப்பட்டவாறு நியமன அலுவலரான முதன்மைக்கல்வி அலுவலர் நிலையில் விதி தளர்வாணைகள் தேவைப்படாத நிலையில் பணிவரன்முறை செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் மற்றும் அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு திரு.செ.ஆனந்தராஜ், திருக்கடையூர், அரசு மேல்நிலைப்பள்ளி இளநிலை உதவியாளர் என்பாரது கருத்துரு ஆய்வு செய்து அதனை ஏற்று தமிழ்நாடு அமைச்சுப்பணியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.செ.ஆனந்தராஜ் என்பவரின் பணியினை பணி நியமனத்திற்கு தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனை அடிப்படையில் கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பெயர்/பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | கல்வித் தகுதி | பிறந்ததேதி மற்றும் பணிநியமன நாளில் வயது | இளநிலை உதவியாளர் பதவியில் | |
|---|---|---|---|---|---|
| | | | | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
| 1 | திரு.செ.ஆனந்தராஜ் , இளநிலை உதவியாளர், அரசு மேல்நிலைப்பள்ளி, திருக்கடையூர். | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி | 08.12.1992 30 வயது | 14.10.2022 முற்பகல் | 14.10.2022 முற்பகல் |

இத்துடன் பெறப்பட்ட தனியரது பணிப்பதிவேடு மற்றும் அசல்கல்விச்சான்றிதழ்கள் பரிசீலனைக்குப்பின் திரும்ப அனுப்பி வைக்கப்படுகிறது.

இவ்வாணை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதலையும், பணிவரன்முறை சார்ந்தப் பதிவுகளை தொடர்புடையவரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளவும் சார்ந்த அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது.

24/10/24

முதன்மைக் கல்வி அலுவலர்,
மயிலாடுதுறை.

பெறுநர்-
தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, திருக்கடையூர்.
(தொடர்புடையவர் கூடுதல் படியுடன்).

27.10.2024

நகல்
1. பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர்தொகுதி) சென்னை 06, பணிந்தனுப்பப்படுகிறது.
2. மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை), மயிலாடுதுறை
3. தலைமையாசிரியர், அரசு உயார்நிலைப்பள்ளி, வாணகிரிகுப்பம்.